# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர்: G. ராஜா 9842364068 இணைஆசிரியர்: R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:129 ★09.09.2026 ★தமிழ் நாளிதழ் ★புதன்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:129 ★09.09.2026 ★TamilDaily ★Wednesday ★Page-4 ★Price-₹5/- Chennai



தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779


# ஓபிசி பிரிவினரை சாதி பெயர்கள் அடிப்படையில் கணக்கெடுக்க வேண்டும்

## பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றம்

மக்கள்தொகை கணக்கெடுப் பில் ஓபிசி பிரிவினரை மத்திய, மாநில அரசு களால் வெளியிடப்பட்ட பட்டியலில் உள்ள சாதி பெயர்கள் அடிப்படையில் கணக்கெடுக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி தமிழக சட்டப் பேரவையில் நேற்று ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.



சட்டப் பேரவையில் நேற்று பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் வே.சம்பத்குமார், மத்திய அரசின் 2027ம் ஆண்டின் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் (ஓபிசி) சாதி விவரங்களை மாநில மற்றும் மத்திய அரசுகளால் வெளி யிடப்பட்ட பட்டியலில் உள்ள சாதிப் பெயர்களின் அடிப்படையில் மட்டுமே பதிவு செய்ய வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி அரசினர்தனி தீர்மானத்தை முன் மொழிந்து பேசியதாவது: நாட்டில் 1931ல் முழுமையான சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்திய சுதந்திரத்துக்குப் பிறகு 2011 வரை நடைபெற்ற மக்கள்தொகை கணக்கெடுப்பில் எஸ்சி, எஸ்டி பிரிவினரின் சாதி விவரங்கள் மட்டுமே சேகரித்து வெளியிடப்பட்டது. 2027 மக்கள் தொகை கணக்கெடுப்பில் முதன் முறையாக முழு சாதிவாரி கணக்கெடுப்பு நடைபெறும் என அறிவிக்கப்பட்டு, முதல்கட்ட பணி முடிவடைந்துள்ளது. 2ம் கட்டமாக பிப்.27ம் தேதி நடைபெற உள்ள மக்கள்தொகை கணக்கெடுப்புக்காக விவரங்கள் சேகரிக்கப்பட உள்ள 40 வினாக்கள் அடங்கிய பட்டியலை மத்திய அரசு கடந்த மாதம் அறிவித்தது.

அதில் வினா எண் 10ல் எஸ்சி, எஸ்டி மற்றும் சாதி தொடர்பான விவரங்கள் கேட்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சாதி விவரங்களை வீடு வீடாக சென்று சேகரிக்கும் இந்த நிகழ்வில் எஸ்சி, எஸ்டி சாதியில் கணக்கெடுப்பு செயலியில் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட பட்டியலில் இருந்து நேரடியாக தேர்வு செய்யும் வகையில் சீராக அமைக்கப்பட உள்ளது.

ஆனால், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட ஓபிசி வகுப்பினருக்கு சாதி என்ற பிரிவின் கீழ் பொதுமக்கள் தெரிவிக்கும் பெயர்களை நேரடியாக தட்டச்சு செய்யும் திறந்தவெளி பதிவு முறை பின்பற்றப்பட உள்ளதாக தெரிகிறது. இது ஓபிசி பிரிவினரின் பிரதிநிதித்துவம் கல்வி, வேலை வாய்ப்பில் பாதிப்பை ஏற்படும். அதற்காகவே இந்த தீர்மானம் கொண்டுவரப்படுகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

தீர்மானத்துக்கு ஆதரவாக அமைச்சர்கள் ஆதவ் அர்ஜூனா, ராஜேஷ்குமார், வன்னியரசு, ஷாஜகான் மற்றும் சி.வி.சண்முகம் (அதிமுக), போஜராஜன் (பாஜக), கணேஷ்குமார் (பாமக), மாரிமுத்து (இந்திய கம்யூனிஸ்ட்), செல்லசாமி (மார்க்சிஸ்ட்) ஆகியோர் ஆதரித்து பேசினர். பின்னர் குரல்வாக்கெடுப்பு மூலம் இத்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

# தவெக திமுக பிரச்சினையில் பேரவை நேரம் வீணடிப்பு: பழனிசாமி குற்றச்சாட்டு

"ஆளுங்கட்சி எதிர்க்கட்சி பிரச்சினையில் சட்டப்பேரவை நேரம் வீணடிக்கப்படுகிறது" என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவை வளாகத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று செய்தியாளர்களை சந்தித்தபோது கூறியது: "தமிழக சட்டப்பேரவையில் தினந்தோறும் ஏதேனும் பிரச்சினை ஏற்படுகிறது. நிதிநிலை அறிக்கை, விவாதத்திலும் பிரச்சினை. மானியக் கோரிக்கையிலும் பிரச்சினை. அதனால் மக்கள் பிரச்சினைகளை அவையில் முழுமையாகப் பேச முடியவில்லை.



இன்றைக்கும், சட்டப்பேரவையில் கேள்வி நேரம் ஆரம்பித்ததும் திமுகவினர் பேச முற்படும்போது பிரச்சினை ஏற்பட்டது. வழக்கமாகவே திமுகவினர் பேசும்போது அமைச்சர்களோ, ஆளும் கட்சி எம்எல்ஏக்களோ ஏதாவது ஒரு பிரச்சினையை, குற்றச்சாட்டை எதிர்க்கட்சி மீது சுமத்துகிறார்கள்.

பிறகு எதிர்க்கட்சித் தரப்பில் பதில், அதற்கு ஆளுங்கட்சியினர் விளக்கம், மீண்டும் எதிர்க்கட்சி பதில் என்று மாறி மாறி இருதரப்பினரும் பதில் சொல்லி அவை நேரம் வீணடிக்கப்படுகிறது. இன்றைக்கும் சுமார் 1 மணி நேரம் வீணானது.

பின்னர் சபாநாயகர் இரு தரப்பையும் சமாதானப்படுத்தி அவை நடந்தாலும், மீண்டும் ஆளும் கட்சியினர் திமுக ஆட்சி மீது குற்றம் சாட்டுகின்றனர். இதில், தவெக ஆட்சியில் 10 மணி நேரம் சட்டப்பேரவை நடைபெறுகிறது என்று பெருமையாகச் சொல்கிறார்கள். ஆனால் 3 மணி நேரம் தான் அவை நடைபெறுகிறது. மீதி 7 மணி நேரம் ஆளும், எதிர்க்கட்சியின் பிரச்சினையால் சட்டப் பேரவை நேரம் வீணடிக்கப்படுகிறது. மற்ற உறுப்பினர்களால் கேள்வி கேட்கவே முடியவில்லை. கேள்வி கேட்டாலும் பதில் இல்லை. அதேபோல் எல்லா கேள்விகளுக்கும் பெரும்பாலும் 3 அமைச்சர்கள்தான் பதில் சொல்கிறார்கள். அதனால் எந்தப் பயனும் இல்லை. அந்தந்த துறை சார்ந்த அமைச்சர்கள் பதில் சொல்வதே தீர்வுக்கான வழி. இதுதான் கடந்தகால வரலாறு. ஆனால் தவெக ஆட்சியில் சட்டப்பேரவை உறுப்பினர்களின் கேள்விக்கு உரிய அமைச்சர்களின் பதில் இல்லை. உதாரணத்துக்கு, தமிழ்நாடு காவல் துறை, தீயணைப்பு துறை மானிய கோரிக்கை மீதான விவாதம் வியாழக்கிழமை நடைபெற்றது. அதில் அதிமுக சார்பில் நான் கலந்துகொண்டு எனது கருத்துகளை பதிவு செய்தேன். ஆனால், என் கேள்விகளுக்கு முதல்வரிடம் இருந்து பதிலில்லை. முதல்வர் பதிலுரையில் மேலோட்டமாகப் பேசுகிறார். ஒரே ஒரு பதில் காவல் துறை காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதே வந்தது.

அதுவும்கூட எப்போது என்ற தகவல் இல்லை. அதேபோல் இணையவழிக் குற்றங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது. FQL ஆன்லைன் மோசடி மூலம் மதுரை, சிவகங்கை உள்ளிட்ட மாவட்டங்களில் மக்கள் பணத்தை இழந்துள்ளனர். ரூ.1,000 கோடி அளவில் ஏழை மக்கள் பணம் நவீன முறையில் மோசடி செய்யப்பட்டுள்ளது. அது மிக முக்கியமான பிரச்சினை. அதற்கும் பதில் இல்லை. சாலை விபத்துகளை தடுக்கும் நடவடிக்கைகள் பற்றி எதுவுமே சொல்லவில்லை. நீண்ட நாட்களாக பணியில் உள்ள காவலர்களின் பதவி உயர்வு குறித்தும் எந்தப் பதிலும் இல்லை.

காவலர்களின் அடிப்படைச் சம்பளம் ரூ.18 ஆயிரத்தில் இருந்து ரூ.27 ஆயிரமாக உயர்த்துவது உட்பட எனது எந்த வித கோரிக்கைக்கும் பதில் இல்லை.

தமிழகத்தில் பொருளாதாரக் குற்றங்கள் அதிகரித்துள்ளது. சீட்டு மோசடி அதிகரித்துள்ளது. அது எதிர்காலத்தில் நடக்கக் கூடாது என்று பேசினேன். அதற்கும் பதில் இல்லை.

இதையெல்லாம் விட்டுவிட்டு 45 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவத்தை எடுத்துப் பேசி அவையில் கலாட்டா நடைபெறுகிறது. இதைப் பேசிப் பேசி சோர்ந்துவிட்டோம். அப்படிப்பட்ட பேச்சுகளால் அவையின் நேரத்தை வீணடிக்கிறார்கள்.

சட்டப்பேரவையில் எங்கள் கேள்விகளுக்கு பதில் இல்லாமல், எப்போதும் ஆளுங்கட்சிக்கு எதிர்க்கட்சிக்கு இடையேயான பிரச்சினையே நடக்கிறது. முதல்வர் பதிலுரையில் கொலை, கொள்ளை, செயின் பறிப்பு, பாலியல் சீண்டல்கள், போதைக் குற்றங்கள் உள்ளிட்டவை நீண்ட காலமாகவே நடக்கின்றன. திடீரென்று நிறுத்த முடியாது என்கிறார். குற்றங்களை தடுக்கும் இடத்தில் இருப்பவர், காவல் துறையை கையில் வைத்திருப்பவர் இப்படி பதில் சொல்லக் கூடாது. தவெக அரசு செயலிழந்த அரசாங்கமாகவே இருக்கிறது. கடந்த ஆட்சியில் நடைபெற்ற கொலை, கொள்ளை, செயின் பறிப்பு, பாலியல் சீண்டல்கள், போதைக் குற்றங்கள் இந்த ஆட்சியில் பலமடங்கு அதிகரித்துள்ளது.

பட்டப்பகலில் நடக்கும் கொலை பதைபதைக்க வைப்பதாக தவெகவுக்கு ஆதரவளித்துள்ள கம்யூனிஸ்ட் கட்சியே விமர்சித்துள்ளது" என்றார்.

# மதுக்கடை வேண்டாம் வீட்டுமனை பட்டா வேண்டும்; திருவண்ணாமலை ஆட்சியரிடம் குவிந்த மக்கள் கோரிக்கைகள்

திருவண்ணாமலை, செப்.9

திருவண்ணாமலை மாவட்டத்தில் புதிய மதுக்கடை திறக்கக் கூடாது, பல ஆண்டுகளாக பட்டா இல்லாமல் தவித்து வரும் இருளர் இன மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும், மலைவாழ் கிராமங்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என வலியுறுத்தி மக்கள் குறைதீர் கூட்டத்தில் பொதுமக்கள் சார்பில் அடுத்தடுத்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரக மன்ற கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை பெற்றுக் கொண்ட ஆட்சியர், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் அவற்றை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க கூட்டத்திலேயே அறிவுறுத்தினார்.

இதில், வந்தவாசி–ஆரணி சாலையில் அமைந்துள்ள காரணை கூட்டுச்சாலை பகுதியில் புதிதாக டாஸ்மாக் மதுக்கடை திறக்கக் கூடாது என வலியுறுத்தி காரணை, தென்சேந்தமங்கலம், தெள்ளூர், மும்முனி, வெண்குன்றம் உள்ளிட்ட 5 ஊராட்சிகளைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

காரணை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் செல்வராணி சுப்பிரமணி தலைமையில், ஒருங்கிணைப்பாளர் கே.வேல்முருகன் மற்றும் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் உள்ளிட்டோர் பொதுமக்களுடன் சென்று மனு அளித்தனர்.

மனுவில், காரணை கூட்டுச்சாலை வழியாக காரணை, தென்சேந்தமங்கலம், எறும்பூர், தெள்ளூர், மும்முனி, முத்துநகர், வெண்குன்றம், லட்சுமிநகர் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மாணவமாணவிகள் பள்ளி, கல்லூரிகளுக்கு தினமும் நடந்து அல்லது சைக்கிள்களில் சென்று வருவதாக தெரிவித்துள்ளனர். இப்பகுதியில் செவிலியர் கல்லூரி மற்றும் தேவாலயம் உள்ளிட்டவையும் இயங்கி வருவதால் பொதுமக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

ஏற்கனவே இப்பகுதியில் சாலையோரங்களிலும் திறந்தவெளிப் பகுதிகளிலும் மது அருந்தும் சம்பவங்கள் நடைபெற்று வருவதாகவும், மது போதையில் சுற்றித்திரியும் நபர்களால் மாணவமாணவிகள், பெண்கள் மற்றும் பொதுமக்கள் அச்சத்துடன் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், மும்முனி ஏரியைச் சுற்றியுள்ள முட்புதர் பகுதிகளில் மது அருந்துவதுடன், விரும்பத்தகாத சமூக விரோத செயல்களும் அவ்வப்போது நடைபெறுவதாகவும்,

இதனால் அந்த வழியாகச் செல்லும் பொதுமக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி வருவதாகவும் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையில் அப்பகுதியில் புதிதாக மதுக்கடை திறக்கப்பட்டால் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும், மாணவமாணவிகள் குறிப்பாக மாணவிகளின் கல்வி பாதிக்கப்படும் சூழல் உருவாகலாம் என்றும் பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். எனவே, பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு காரணை கூட்டுச்சாலை பகுதியில் புதிதாக டாஸ்மாக் மதுக்கடை திறக்க அனுமதிக்கக் கூடாது என வலியுறுத்தினர்.

இதே மக்கள் குறைதீர் கூட்டத்தில், தண்டராம்பட்டு வட்டம் கீழ்பாச்சார் மலைவாழ் மக்கள் கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு நிலத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என தென்னிந்திய பழங்குடியினர் நலச் சங்க மாநில தலைவர் மற்றும் சமூக ஆர்வலர் வெ. கோ. பஞ்சநாதன் மனு அளித்தார்.



மேலும், மலையனூர் ஊராட்சிக்குட்பட்ட கூட்டாறு பிரதான சாலையில் இருந்து கீழ்பாச்சார் மலை கிராமத்துக்குச் செல்லும் மேல்பாச்சார் சாலை குண்டும் குழியுமாக இருப்பதால், அச்சாலையை சீரமைத்து மலைவாழ் மக்களின் போக்குவரத்து வசதியை மேம்படுத்த வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கிடையே, திருவண்ணாமலை மாவட்டத்தில் பல ஆண்டுகளாக வீட்டுமனை பட்டா கேட்டு போராடி வரும் இருளர் இன மக்களின் கோரிக்கையும் மக்கள் குறைதீர் கூட்டத்தில் முக்கியத்துவம் பெற்றது.

தென்னிந்திய பழங்குடி இருளர் முன்னேற்ற சங்க மாநில பொதுச்செயலாளர் ம.சரவணன் தலைமையில் இருளர் இன மக்கள் ஆட்சியர் வந்தனா கார்க்கிடம் மனு அளித்தனர். அதில்,திருவண்ணாமலை வட்டம் மேலத்திக்கான், கரியான் செட்டித்தெரு, எடப்பாளையம் எம்.ஜி.ஆர். நகர், கீழ்அணைக்கரை, வேங்கிக்கால், அண்ணாநகர், மாரியம்மன் கோவில் தெரு உள்ளிட்ட பகுதிகளிலும், மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் 250க்கும் மேற்பட்ட இருளர் குடும்பங்கள் வசித்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

தங்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கக்கோரி பல ஆண்டுகளாக தொடர்ந்து மனுக்கள் அளித்து வருவதாகவும், 2024ம் ஆண்டு முதல் ஜமாபந்தி உள்ளிட்ட அரசு நிகழ்ச்சிகளில் தொடர்ந்து கோரிக்கை மனுக்கள் அளித்தும் இதுவரை உரிய தீர்வு கிடைக்கவில்லை என்றும் அவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

நிலையான வீட்டுமனை உரிமை இல்லாமல் வாழ்ந்து வரும் தங்களது குடும்பங்களின் நிலையை கருத்தில் கொண்டு, தகுதியான இருளர் குடும்பங்களுக்கு உடனடியாக வீட்டுமனை பட்டா வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

மேலும், தங்களது நீண்டகால கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம் என தென்னிந்திய பழங்குடி இருளர் முன்னேற்ற சங்க மாநில பொதுச்செயலாளர் ம.சரவணன் தெரிவித்தார்.

ஒரே மக்கள் குறைதீர் கூட்டத்தில் மதுக்கடை எதிர்ப்பு, பழங்குடியின மக்களின் அடிப்படை வசதிகள் மற்றும் இருளர் மக்களின் வீட்டுமனை உரிமை என மக்களின் வாழ்வாதாரம், பாதுகாப்பு மற்றும் எதிர்காலத்துடன் தொடர்புடைய பல்வேறு முக்கிய பிரச்சினைகள் ஆட்சியரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

மனுக்களை பெற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க், ஒவ்வொரு கோரிக்கையையும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைத்து, உரிய முறையில் ஆய்வு செய்து விரைந்து நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# தேசிய கல்வி உதவித்தொகை ரூ.1.25 லட்சம் வரை பெற வாய்ப்பு; தகுதியான மாணவர்கள் செப்.30க்குள் விண்ணப்பிக்கலாம்

திருவண்ணாமலை, செப்.9

இதர பிற்படுத்தப்பட்டோர் (OBC), பொருளாதாரத்தில் பின்தங்கியோர் (EBC), சீர்மரபினர் (DNT) பிரிவுகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கு ஒன்றிய அரசின் பிரதம மந்திரியின் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு ரூ.1.25 லட்சம் வரை கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் தகுதியான மாணவர்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம் என திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

*PM YASASVI – Top Class Education in Schools for OBC, EBC & DNT Students* என்ற இத்திட்டத்தின் கீழ், 2026 27ஆம் கல்வியாண்டில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் தகுதியான மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணமாக ஆண்டுக்கு அதிகபட்சமாக உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இதன்படி, 9 மற்றும் 10ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு அதிகபட்சமாக ரூ.75,000 வரையிலும், 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ரூ.1,25,000 வரையிலும் ஒன்றிய அரசால் கல்வி உதவித்தொகை வழங்கப்படும். இத்திட்டத்தில் 30 சதவீத இடங்கள் மாணவியர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் பயன்பெற மாணவ, மாணவியர்கள் OBC, EBC அல்லது DNT பிரிவைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். குடும்பத்தின் மொத்த ஆண்டு வருமானம் ரூ.2.50 லட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

மேலும், 202526ஆம் கல்வியாண்டில் 100 சதவீத தேர்ச்சி பெற்றதாக, தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் ஒன்றிய அரசால் வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் இடம்பெற்றுள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர்களாக இருக்க வேண்டும்.

புதுப்பித்தல் விண்ணப்பம்

202526ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை பெற்று பயனடைந்த மாணவ, மாணவியர்கள், 202627ஆம் கல்வியாண்டில் 10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பயிலும் நிலையில், தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் தங்களது விண்ணப்பத்தை உறுதி செய்து *Renewal* விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.

புதுப்பித்தல் விண்ணப்பங்களை 30.09.2026க்குள் சமர்ப்பிக்க வேண்டும். மாணவர்கள் இணையதளத்தில் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட பள்ளித்தலைமை ஆசிரியர்கள் சரிபார்ப்பதற்கான கடைசி நாள் 15.10.2026 என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய விண்ணப்பம் 202627ஆம் கல்வியாண்டில் புதிதாக விண்ண ப்பிக்க விரும்பும் 9 மற்றும் 11ஆம் வகுப்பு தகுதியான மாணவ, மாணவியர்களுக்கான விண்ணப்ப தேதி தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் பின்னர் அறிவிக்கப்படும். தகுதியான மாணவ, மாணவியர்கள் தேசிய கல்வி உதவித்தொகை இணையதளமான *https://scholarships.gov.in* வாயிலாகவும், ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணையதளமான *http://socialjustice.gov.in* வாயிலாகவும் திட்டம் தொடர்பான கூடுதல் விவரங்களை அறிந்து கொள்ளலாம். எனவே, தகுதி பெற்ற மாணவ, மாணவியர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டுள்ளார்.




# மாவட்ட ஆட்சித் தலைவர் ப்ரியா ரவிச்சந்திரன், உலக நுகர்வோர் உரிமைகள் தினவிழாவினை தொடங்கி வைத்தார்கள்

இராணிப்பேட்டை, செப்.9

மாவட்ட ஆட்சித் தலைவர் ப்ரியா ரவிச்சந்திரன், உலக நுகர்வோர் உரிமைகள் தினவிழாவினை தொடங்கி வைத்தார்கள்.

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் ப்ரியா ரவிச்சந்திரன், நேற்று வாலாஜா அறிஞர் அண்ணா அரசினர் பெண்கள் கலைக் கல்லூரியில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையின் சார்பில் உலக நுகர்வோர் உரிமைகள் தினவிழாவினை தொடங்கி வைத்து. இவ்விழாவினையொட்டி நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற 20 மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி தெரிவித்ததாவது

நுகர்வோர் அனைவரும் பொருட்களில் காலாவதியான தேதியையும், எடை அளவு சரியாக உள்ளதா என்பதை பார்வையிட்டு பொருட்களை வாங்க வேண்டும்.

இதில் குறைபாடுகள் ஏதும் இருந்தால் 1915 மற்றும் 1800114000 என்ற எண்ணிற்க்கு தொடர்பு கொண்டு புகார்களை தெரிவிக்க வேண்டுமென தெரிவித்தார்.

உலக நுகர்வோர் உரிமைகள் தினத்தையொட்டி வாலாஜா அறிஞர் அண்ணா அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி, கலவை ஆதிபராசக்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆற்காடு ஸ்ரீ மகாலட்சுமி மகளிர் கல்லூரி விளாப்பாக்கம் ஆகிய கல்லூரிகளை சார்ந்த மாணவிகளிடையே நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, கவிதை, ஓவியம், முழக்கம் (Slogan) ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற 20 மாணவியர்களுக்கு நினைவுப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் இராணிப்பேட்டை மாவட்ட உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் பன்னீர்செல்வம், இராணிப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் ராஜி. கல்லூரி முதல்வர் முனைவர்.நசீம் ஜான், வாலாஜா வட்டாட்சியர் நடராஜன், தனி வட்டாட்சியர் (பறக்கும் படை) ஆனந்தன், வாலாஜா வட்ட வழங்கல் அலுவலர் தியாகராஜன் அனைத்து துறை அலுவலர்கள், நுகர்வோர் சங்கத்தினர் மற்றும் கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டனர்.



பழனி இடும்பன் கோவிலில் நகை காணாமல் போன வழக்கு. திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் கோவில் ஊழியர்களிடம் விசாரணை



# தொழில் தொடங்க இளைஞர்களுக்கு ரூ.75 லட்சம் வரை மானியம்: NEEDS திட்டத்தில் முதல் தலைமுறை தொழில் முனைவோர் பயன்பெறலாம்

## கலெக்டர் வந்தனா கார்க் அறிவிப்பு

திருவண்ணாமலை: செப்.9

திருவண்ணாமலை மாவட்டத்தில் படித்த முதல் தலைமுறை தொழில் முனைவோர் சொந்தமாக தொழில் தொடங்கி சுய வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனம் மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) மூலம் ரூ.75 லட்சம் வரை மானியம் வழங்கப்படுவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் கீழ், உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில்களை தொடங்க விரும்பும் தகுதியான முதல் தலைமுறை தொழில் முனைவோர் பயன்பெறலாம். திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ.5 கோடி வரையிலான திட்ட முதலீட்டில் தொழில் தொடங்க அனுமதிக்கப்படுகிறது. திட்ட முதலீட்டில் 25 சதவீதம், அதிகபட்சமாக ரூ.75 லட்சம் வரை மானியமாகவும், 3 சதவீதம் வட்டி மானியமாகவும் வழங்கப்படுகிறது.

பொதுப் பிரிவைச் சேர்ந்த பயனாளிகள் திட்ட மதிப்பீட்டில் 10 சதவீதத்தை தங்களது பங்காக செலுத்த வேண்டும். சிறப்புப் பிரிவைச் சேர்ந்த பயனாளிகள் 5 சதவீதத்தை தங்களது பங்காக செலுத்த வேண்டும். மேலும், விண்ணப்பதாரர்கள் கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டில் வசித்து வருபவர்களாக இருக்க வேண்டும்.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் முதல் தலைமுறை தொழில் முனைவோர் 12ஆம் வகுப்பு, தொழிற்கல்வி (+2 Vocational), ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு (Diploma) அல்லது ஐடிஐ படித்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். கடன் மற்றும் மானிய உதவிக்கு விண்ணப்பிக்கும் பொதுப் பிரிவினருக்கு அதிகபட்ச வயது 45 ஆகவும், சிறப்புப் பிரிவினருக்கு அதிகபட்ச வயது 55 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தகுதியுடையவர்கள் NEEDS திட்டத்திற்கான *www.msmeonline.tn.gov.in/needs* இணையதளத்தில் விண்ணப்பித்து, விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து, இரு நகல்களுடன் மாவட்டத் தொழில் மைய அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்துடன் மாற்றுச் சான்றிதழ், கல்வித் தகுதிச் சான்று, விரிவான திட்ட அறிக்கை, குடும்ப அட்டை, ஆதார் அட்டை, சாதிச் சான்று, விலைப்புள்ளி மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் உள்ளிட்ட ஆவணங்களை இணைக்க வேண்டும்.

படித்த இளைஞர்கள் வேலை தேடுபவர்களாக மட்டுமின்றி, வேலை வாய்ப்பை உருவாக்கும் தொழில் முனைவோ ர்களாக உருவாகும் வகையில் NEEDS திட்டம் முக்கிய வாய்ப்பாக அமைந்துள்ளது. எனவே, தகுதியும் தொழில் தொடங்கும் ஆர்வமும் உள்ள முதல் தலைமுறை தொழில் முனைவோர் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு மாவட்டத் தொழில் மையத்தை அணுகி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டுள்ளார்.



# FQL, VG செயலி மோசடி: முக்கிய குற்றவாளிகள் சரண்

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே காசம்பட்டி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் FQL, VG ஆன்லைன் செயலிகள் மூலம் முதலீடு செய்தால் 45 நாட்களில் பணம் இரட்டிப்பாகும் என ஆசைவார்த்தை கூறி பல கோடி ரூபாய் மோசடி நடைபெற்றதாக புகார் எழுந்தது. இதுதொடர்பாக மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் 7க்கும் மேற்பட்ட ஏஜெண்டுகளை கைது செய்து சிறையில் அடைத்தனர். பின்னர் வழக்கு பொருளாதார குற்றப்பிரிவுக்கு மாற்றப்பட்டது. இந்நிலையில் இவ்வழக்கின் முக்கிய குற்றவாளிகளான ரஞ்சித் மற்றும் பிரியதர்ஷினி திண்டுக்கல் நீதிமன்றத்தில் சரணடைந்தனர். இதையடுத்து மதுரையில் இருந்து வந்த பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் இருவரையும் விசாரணைக்காக மதுரைக்கு அழைத்துச் சென்றனர்.

# மாதவரம் வடக்கு பகுதி வடபெரும்பாக்கத்தில் 1000 பேருக்கு அறுசுவை உணவு அன்னதானம்

## புழல் எம். நாராயணன் வழங்கினார்

செங்குன்றம், செப்டம்பர் 09:

மாதவரம் வடக்கு பகுதி வடபெரும்பாக்கத்தில் 1000 பேருக்கு அறுசுவை உணவு அன்னதானம் புழல் எம். நாராயணன் வழங்கினார்



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் அன்னை வேளாங்கண்ணி மாதா பிறந்தநாளை முன்னிட்டு ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு அன்னதானமாக வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் 17வது வட்டம் வடபெரும்பாக்கம் கன்னியம்மன் கோயில் அருகே வேளாங்கண்ணி அன்னை மாதா பிறந்தநாளை முன்னிட்டு பொதுமக்கள் ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. 17வது வட்டச்செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு 17 வது வார்டு வடபெரும்பாக்கம் சிறுதொழில் முனைவோர் சங்க தலைவர் பி. மோகன் தலைமை வகித்தார். சங்க நிர்வாகிகள் கே. பிரபுராமன், அன்பழகன், வேல்ராஜ், சதீஷ், எஸ். ரவிக்குமார், எம்..மைக்கேல், பி.செந்தில், இ.கார்த்திக், மாதவரம் வடக்கு பகுதி ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் அரியலூர் எஸ். நாகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்ச்சிகள் கலந்து கொண்ட மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் அவர்கள் பொதுமக்கள் ஆயிரம் பேருக்கு சைவ பிரியாணி இனிப்புடன் வழங்கினார் பொதுமக்கள் வரிசையில் நின்று உணவைப் பெற்று மகிழ்ந்தனர்.

இந்நிகழ்ச்சியில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முக பிரியன், வட்ட நிர்வாகிகள் சி. மூர்த்தி, எஸ். பாலாஜி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் டி.வினோத், ராஜ்குமார், சின்ன தோப்பு ஜி. முனிவேல், எஸ். கமலநாதன், பாக முகவர்கள் டி. திவாகர், வி. சுமிர், எம். கோவிந்தன், ஜி. கார்த்திக், தீயம்பாக்கம் எம். ஜான்சன், இ. சுதர்சன், ஜி. பூபாலன், சந்தோஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




# வாலாஜா காசிவிஸ்வநாதர் ஆலயத்தில் பிரதோஷபூஜை

வாலாஜாபேட்டை, செப்.9

வாலாஜாபேட்டையில் விசாலாட்சி அம்பாள் சமேத காசி விஸ்வநாதர் ஆலயத்தில் ஆவணி மாத தைபிறை பிரதோஷத்தை முன்னிட்டு பிரதோஷ நாயகருக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு ஆலயத்தை வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

## மகரிஷி பள்ளி மாணவர்களின் உழவாரப்பணி:

# சிம்ம தீர்த்தக் குளம் மற்றும் மலை பாதை தூய்மைப்படுத்தல்

திருவண்ணாமலை: செப்.9



திருவண்ணாமலை மகரிஷி வித்யா மந்திர் பள்ளி மாணவ, மாணவிகள் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் , பிராண கேந்திரா ஆஸ்ரமத்துடன் இணைந்து, திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் அமைந்துள்ள சிம்ம தீர்த்தக் குளம் மற்றும் மலைப் பாதையில் உழவாரப் பணி மேற்கொண்டனர்.

மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று, குளம் மற்றும் மலைப் பாதையில் காணப்பட்ட குப்பைகள், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் கண்ணாடி பாட்டில்கள் உள்ளிட்டவற்றை அகற்றி சுற்றுப்புறத்தைத் தூய்மைப்படுத்தினர் மேலும் வெளிநாட்டவருடன் இணைந்து பக்தி பாடல்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு பாடல்களை பாடினர். இந்நிகழ்வின் மூலம் மாணவர்களுக்கும் , பொதுமக்களுக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தூய்மை மற்றும் சமூகப் பொறுப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

ஆன்மிக முக்கியத்துவம் வாய்ந்த திருவண்ணா மலை கிரிவலப் பாதையை தூய்மையாகப் பாதுகாப்பதில் மாணவர்களின் பங்களிப்பு பாராட்டத்தக்கதாக அமைந்தது.

இந்நிகழ்வில் பள்ளியின் முதல்வர் அனிதாராம், பள்ளி ஆசிரியர்கள், பிராண கேந்திரா ஆஸ்ரம நிர்வாகிகள் மற்றும் தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரியில்

# 11 மாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கான அக்னிவீர் இராணுவ ஆட்சேர்ப்பு முகாம்; அனுமதிச் சீட்டுகள் வெளியீடு

கிருஷ்ணகிரி,செப்.9

கோவை இரா ணுவ ஆட்சேர்ப்பு அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பின் அறிக்கையின்படி,கோவை, திருப்பூர், சே லம், ஈரோடு, கி ரு ஷ் ண கி ரி , திண்டுக்கல், நாமக்கல், நீலகிரி, மதுரை, தேனி, தர்மபுரி ஆகிய 11 மாவட்டங்களை சேர்ந்த இளைஞர்களுக்கான இந்திய இராணுவத்தின் 'அக்னி



வீர்' ஆட்சேர்ப்பு முகாம், கிருஷ்ணகிரியில் உள்ள மாவட்ட விளையாட்டு மைதானத்தில் வரும் 25 ஆம் தேதி தொடங்கி அக்டோபர் 7ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

ஆன்லைன் பொது நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற விண்ணப்ப தாரர்களை அக்னிவீர் கிளார்க், பொது பணிப்பிரிவு (அனைத்து ஆயுதப்பிரிவு), தொழில்நுட்பப் பிரிவு, டிரேட்ஸ்மேன் மற்றும் மகளிர் இராணுவ காவல் படை ஆகிய பிரிவுகளில் சேர்ப்பதற்காக இந்த முகாம் நடத்தப்படுகிறது.

இப்பிரிவுகளுக்கான அனுமதிச் சீட்டுகள் (Admit Cards) ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டன. விண்ணப்பதாரர்கள் www.joinindianarmy.nic.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு முகாம் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள அனைத்து தேவையான ஆவணங்கள் மற்றும் படிவங்களை சரியாக கொண்டு வர வேண்டும். முழுமையான ஆவணங்கள் இல்லாமலோ, தவறான படிவத்திலோ, குறிப்பாக உறுதிமொழி பத்திரத்தை தவறாக கொண்டு வரும் விண்ணப்பதாரர்கள் முகாமில் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

இராணுவ ஆட்சேர்ப்பு நடைமுறைகள் அனைத்தும் முற்றிலும் தானியங்கி முறையில், நியாயமாகவும் வெளிப்படையாகவும் நடத்தப்படுகின்றன. எனவே, பணமோ அல்லது போலி வாக்குறுதிகளோ கொடுத்து தேர்ச்சி பெற செய்வதாகவோ, இராணுவத்தில் சேர்த்து விடுவதாகவோ கூறும் இடைத்தரகர்கள் மற்றும் மோசடி நபர்களிடம் விண்ணப்பதாரர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இந்த ஆட்சேர்ப்பு முகாம் தொடர்பான சந்தேகங்கள், விளக்கங்கள் அல்லது உதவிகள் தேவைப்பட்டால், விண்ணப்பதாரர்கள் கோவையில் உள்ள இராணுவ ஆட்சேர்ப்பு அலுவலகத்தை நேரடியாக தொடர்பு கொள்ளலாம்.

# அனக்காவூர் வட்டாரத்திற்குட்பட்ட செய்யாற்றை வென்றான் விவசாயிகளுக்கு மண்வள மேலாண்மை பயிற்சி

## மண் பரிசோதனை முதல் இயற்கை உரங்கள் தயாரிப்பு வரை செயல்விளக்கம்

செய்யாறு,செப்.

திருவண்ணாமலை மாவட்டம், அனக்காவூர் வட்டாரத்திற்குட்பட்ட செய்யாற்றை வென்றான் கிராமத்தில் விவசாயிகளுக்கு மண்வள மேலாண்மை மற்றும் மண் பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்து சிறப்பு பயிற்சி நடைபெற்றது.

வேளாண்மைத் துறையின் ஆத்மா திட்டத்தின் கீழ், மாவட்டத்திற்குள் விவசாயிகள் பயிற்சி திட்







டத்தின் வாயிலாக நடைபெற்ற இப்பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டனர். வேளாண்மை உதவி இயக்குநர் மு.சித்ரா தலைமையில் நடைபெற்ற பயிற்சியில், மண்ணின் வளத்தை பாதுகாத்து, குறைந்த செலவில் அதிக மகசூல் பெறுவதற்கான பல்வேறு தொழில்நுட்ப முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

வேளாண்மை அறிவியல் நிலைய மண்வள வல்லுநர் சவுத்ரி, மண்ணில் உள்ள நுண்ணூட்டச் சத்துகளின் முக்கியத்துவம், பயிர்களில் ஏற்படும் ஊட்டச்சத்து குறைபாடுகளை கண்டறியும் முறைகள், மண் வளத்திற்கு ஏற்ப உரமிடுதல், இயற்கையான தழைச்சத்துகளை பயன்படுத்துதல் உள்ளிட்ட மண்வள மேலாண்மை தொடர்பான பல்வேறு வழிமுறைகளை விரிவாக எடுத்துரைத்தார்.

வேளாண்மை அலுவலர் ஏழுமலை, மண் பரிசோதனை ஆய்வகத்தில் மண் மாதிரிகள் எவ்வாறு பரிசோதிக்கப்படுகின்றன, மண்ணின் தன்மை மற்றும் அதில் உள்ள ஊட்டச்சத்துக்கள் எவ்வாறு கண்டறியப்படுகின்றன, பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் உரப் பரிந்துரைகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்பது குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளித்தார்.

மேலும், வேளாண்மை உதவி இயக்குநர் மு. சித்ரா, வேளாண்மை விரிவாக்க மையத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடு குறித்து விளக்கினார். ஆத்மா திட்ட அலுவலர்கள் ஆ.செண்பகம், ம.ஜெனிபர், தே.பன்னீர்செல்வம் ஆகியோர் மீன் அமிலம், பஞ்சகவ்யா உள்ளிட்ட இயற்கை உரங்களை தயாரிக்கும் முறைகள் மற்றும் அவற்றை பயிர்களுக்கு பயன்படுத்துவதன் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

மண் பரிசோதனை செய்து அதன் முடிவுகளின் அடிப்படையில் உரங்களை பயன்படுத்துவதன் மூலம் தேவையற்ற உரச் செலவை குறைப்பதுடன், மண்ணின் வளத்தை நீண்டகாலத்திற்கு பாதுகாத்து பயிர்களின் மகசூலை அதிகரிக்க முடியும் என விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

பயிற்சியில் மண் பரிசோதனை ஆய்வக உதவியாளர் ஜெய் முகேஷ் உள்ளிட்ட வேளாண்மைத் துறை மற்றும் ஆத்மா திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது.

விவசாயிகளின் அறிவை மேம்படுத்தும் வகையில் மண்வள மேலாண்மை குறித்த பயிற்சியை ஏற்பாடு செய்த வேளாண்மைத் துறை மற்றும் ஆத்மா திட்ட அலுவலர்களுக்கு செய்யாற்றை வென்றான் கிராம விவசாயிகள் நன்றி தெரிவித்தனர்.




ஒழுகூர் கிராமத்தில் இயற்கையே இறைவன் ஆதி காசி சித்தர் பீடத்தில் செவ்வாய்க்கிழமை ஆவனி மாத பிரதோஷ பூஜை சிறப்பாக நடைபெற்றது

# செங்குன்றம் பேரூர் GENZ DMK சார்பில் இரு நாள் மாபெரும் பகல் நேர பூப்பந்து கிரிக்கெட் போட்டி

செங்குன்றம், செப்டம்பர் 09:

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செங்குன்றம் பேரூர் கழகத்தின் GENZ DMK சார்பில் இரு நாள் மாபெரும் பகல் நேர பூப்பந்து கிரிக்கெட் போட்டி எல்.ஆர்.





மணிகண்டன், ஆர்.வருண் ஆகியோர் ஏற்பாட்டில் செங்குன்றம் ஒஆர்ஜிஎன் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் செங்குன்றம் பேரூர் கழக பொறுப்பாளர் ஆர்.டி. சுதாகர், சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் ஆகியோர் இணைந்து போட்டியில் பங்கேற்று முதல் பரிசு பெற்ற சிவா பிரண்ட்ஸ் அணிக்கு ரூ. 20,000மும், இரண்டாம் இடம் பெற்ற ஹெச்சிசி அணிக்கு ரூ. 15,000மும், மூன்றாம் இடம் இடம் பெற்ற பிஎஸ்கே அணிக்கு ரூ. 10,000மும், நான்காம் இடம் இடம் பெற்ற ஸ்ட்ரீட் கிரிக்கெட் அணிக்கு ரூ. 5,000மும் பரிசுத் தொகையையும் கோப்பையையும் வழங்கினர். சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு கோப்பையும் மற்றும் பரிசுத் தொகையை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் செங்குன்றம் பேரூர் கழக துணை செயலாளர்கள் கே. கபிலன், அன்பு, 10வது வார்டு செயலாளர் மதிவாணன், வழக்கறிஞர் அறிவுநிதி, 15வது வார்டு செயலாளர் அப்துல் சமது, இளைஞர் அணி அமைப்பாளர்கள் கே.எல். என்.லெனின்குமார், புழல் செ.யுவராஜ், மணலி எஸ். ஸ்டாலின், துணை அமைப்பாளர்கள் ஷாம் கார்த்திக், கருப்பு (எ) ஸ்ரீதர், கிருஷ்ணமூர்த்தி, ரவீந்திரன், ரெட் ஹில்ஸ் எம்.எஸ். மணிகண்டன், காவை சாந்தகுமார், ம.குறளரசன், ஆர்.ரூபேஷ், வார்டு அமைப்பாளர்கள் நந்தகுமார், பிரபாகரன், நரேஷ், யாசின், புழல் சித்தர், அரிஷ், நித்தீஷ், வினோத், ஐசக், உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# மாவட்ட குழந்தைகள் சமூக பாதுகாப்பு பணியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு மாவட்ட ஆட்சியர்

ராணிப்பேட்டை செப்.09



இராணிப்பேட்டை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிற்கு இரண்டு சமூகப் பணியாளர் பதவி முற்றிலும் தற்காலிக தொகுப்பூதிய ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படஉள்ளதால் அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணியிடங்களின் எண்ணிக்கை 02 மாத ஊதியம் ரூ18,536 தொகுப்பூதியம் கல்வி தகுதி & அனுபவம் :Graduate preferably in B.A. in Social Work/Sociology/Social வயது வரம்பு முகவரி தொலைபேசிSciences from a recognized university. Weightage for work experience candidate. Proficiency in Computer. 42 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது. அனுப்ப வேண்டிய முகவரி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,4வது தளம், Fபிளாக்,மாவட்ட ஆட்சியர் அலுவலகம், இராணிப்பேட்டை மாவட்டம்.தொலைபேசி எண்.04172 299347 பூர்த்தி செய்யப்பட்ட புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பங்கள் அனைத்துச் சான்றிதழ் நகல்களுடன் பத்திரிக்கைச் செய்தி வெளியாகிய 15 நாட்களுக்குள் மேற்குறிப்பிட்ட அலுவலக முகவரிக்கு வந்து சேர வேண்டும்.

விண்ணப்பங்களை https://ranipet.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள், உரிய சான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் முன் தகவலின்றி நிராகரிக்கப்படும். இது தொடர்பாக எந்தவொரு கடித போக்குவரத்தும் மேற்கொள்ளப்படமாட்டாது என மாவட்ட ஆட்சியர் ப்ரியா ரவிச்சந்திரன், தெரிவித்துள்ளார்.

## திருவண்ணாமலையில்

# செப்.11ல் மாபெரும் தனியார் வேலைவாய்ப்பு முகாம்: 500க்கும் மேற்பட்ட பணியிடங்கள்

## முன்னணி நிறுவனங்கள் பங்கேற்பு

திருவண்ணாமலை, செப்.9

திருவண்ணாமலை மாவட்டத்தில் வேலைவாய்ப்பை எதிர்நோக்கும் இளைஞர்களுக்கு சிறப்பான வாய்ப்பாக, மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் செப்டம்பர் 11ம் தேதி நடைபெற உள்ளது.

திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய வளாகத்தில் அன்று காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும் இம்முகாமில், 30க்கும் மேற்பட்ட முன்னணி தனியார் நிறுவனங்கள் பங்கேற்று, 500க்கும் மேற்பட்ட பணிக்காலியிடங்களுக்கு தகுதியான நபர்களை நேரடியாக தேர்வு செய்ய உள்ளன.

பல்வேறு கல்வித் தகுதிகளுக்கு ஏற்ப பணியிடங்கள் உள்ளதால், 8ம் வகுப்பு, 10ம் வகுப்பு, 12ம் வகுப்பு, பட்டப்படிப்பு, முதுநிலைப் பட்டப்படிப்பு, பொறியியல், ஐ.டி.ஐ. மற்றும் பாலிடெக்னிக் உள்ளிட்ட கல்வித் தகுதி பெற்ற வேலைநாடுநர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

வேலை தேடும் இளைஞர்கள் தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகளை நேரடியாக சந்தித்து தங்களது கல்வித் தகுதி மற்றும் திறமைக்கேற்ப வேலைவாய்ப்பை பெறுவதற்கான வாய்ப்பாக இம்முகாம் அமைய உள்ளது.

முகாமில் கலந்து கொள்ள விரும்புவோர் தங்களது பாஸ்போர்ட் அளவு புகைப்படம், ரேஷன் அட்டை, ஆதார் அட்டை, சாதிச்சான்று மற்றும் கல்வித் தகுதி சான்றிதழ்களின் நகல்களை கொண்டு வர வேண்டும்.

மேலும், வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்க விரும்புவோர் www.tnprivatejobs.tn.gov.in என்ற இணையதளத்திலும் பதிவு செய்து கொள்ளலாம்.

முகாம் தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு 04175233381 என்ற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெறலாம்.

எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் இந்த அரிய வாய்ப்பை தவறவிடாமல், உரிய ஆவணங்களுடன் வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்று தங்களது திறமைக்கேற்ற வேலைவாய்ப்பை பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டுள்ளார்.






# புழல் வட்டாரம், செங்குன்றம் நகரத்திற்கு SSA2 நிர்வாகிகள் தேர்வு செய்வதற்கான விருப்ப மனு பெறும் நிகழ்ச்சி

செங்குன்றம், செப்டம்பர் 09:

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் அறிவுறுத்தலின்படியும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் வழிகாட்டுதலின்படியும், SSA2 முறைப்படி நிர்வாகிகள் தேர்வு செய்வதற்கான விருப்ப மனு பெறும் நிகழ்ச்சி திருவள்ளூர் தெற்கு மாவட்டம் புழல் வட்டாரம், செங்குன்றம் நகரம் ஆகிய நிர்வாகிகளுக்கு மாதவரம் தொகுதி கிராண்ட்லைன் ஊராட்சி சமுதாய நலக் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் திருவள்ளூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் காங்கை குமார், மாவட்ட பொறுப்பாளர் முருகேசன், மாநில நிர்வாகி சாந்தகுமார், வட்டாரத் தலைவர் நித்தியானந்தம், மாவட்ட நிர்வாகி சாமியார் மடம் கோபி, செங்குன்றம் எஸ். ஜெயப்பிரகாஷ்(எ)கோபி, நாகராஜ் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## ஸ்ரீ முனீஸ்வரர் ஸ்ரீ ரேணுகா பரமேஸ்வரி ஆலய கும்பாபிஷேகம் விழா:

# தவெக நிர்வாகி கார்த்திக்கிற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து கலசம் வழங்கப்பட்டது



செங்குன்றம், செப்டம்பர் 09:

ஸ்ரீ முனீஸ்வரர் ஸ்ரீ ரேணுகா பரமேஸ்வரி ஆலய கும்பாபிஷேகம் விழாவில் தவெக நிர்வாகி கார்த்திக்கிற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து கலசம் வழங்கப்பட்டது

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி ஆட்டந்தாங்கல் நாகாத்தம்மன் நகர் சர். சி.வி.ராமன் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீமுனீஸ்வரர்ஸ்ரீரேணுகா பரமேஸ்வரி ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தனமஹாகும்பாபிஷேகம் விழா ஆலய நிர்வாகி திருநங்கை பூஜா அம்மா மற்றும் திருநங்கைகள் ஏற்பாட்டிலும் தலைமையிலும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டம், சோழவரம் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட நல்லூர்ஊராட்சி தவெக நிர்வாகி எம்.கார்த்திக் அவர்களுக்கு ஆலய நிர்வாகி திருநங்கை பூஜா உள்ளிட்ட திருநங்கைகள் மாலை அணிவித்து மரியாதை செய்து கலசம் வழங்கினர். உடன் தவெக நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# சின்னமன்னூர் நகராட்சியில் முடங்கிய வளர்ச்சிப் பணிகள்

## நிரந்தர ஆணையரை நியமிக்க பொதுமக்கள் கோரிக்கை

தேனி,செப்.9

தேனி மாவட்டம் சின்னமன்னூர் நகராட்சியில் பணியாற்றிய நகராட்சி ஆணையாளர் இடமாற்றம் செய்யப்பட்டு 60 நாட்களுக்கும் மேலாகியும், இதுவரை புதிய நிரந்தர ஆணையாளர் நியமிக்க ப்படவில்லை. தற்போது கூடுதல் பொறுப்பாக மற்றொரு நகராட்சி ஆணையாளர் இதை கவனித்து வருவதால், நகராட்சி நிர்வாகத்தின் அன்றாட பணிகளையும் திட்டப்பணிகளையும் முழுமையாக கண்காணிக்க முடியாமல் பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக சாக்கடை தூர்வாருதல், சாக்கடைக்கு மேம்பாலம் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு பணிகள் தரக் கட்டுப்பாடும் கண்காணிப்பும் இன்றி தாறுமாறாக நடைபெற்று வருவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். நகராட்சி நிர்வாகத்தில் எவ்வித வெளிப்படைத் தன்மையும் இன்றி பணிகள் சுணக்கமடைந்துள்ளதால், பொதுமக்கள் தங்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக நகராட்சி அலுவலகத்தை அணுகும்போது அலைக்கழிக்



கப்படும் சூழல் நிலவுகிறது. மேலும், ஒரே நகராட்சியில் 10க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கடந்த 15 முதல் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்து வருவதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தமிழக அரசு விதிகளின்படி, அரசு ஊழியர்கள் மற்றும் நகராட்சி பணியாளர்கள் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை கட்டாய இடமாற்றம் செய்யப்பட வேண்டும்.

இத்தகைய இடமாற்றங்கள் முறைப்படி பின்பற்றப்படுகிறதா அல்லது விதிவிலக்குகள் என்ற பெயரில் தவிர்க்கப்படுகிறதா என்ற கேள்வி மக்களிடையே எழுந்துள்ளது. ஒரே இடத்தில் பல ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றுவதால் நிர்வாகத்தில் முறைகேடுகளும் லஞ்ச பணம் புழக்கமும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அஞ்சப்படுகிறது. இதோடு மட்டுமின்றி, ஓய்வுபெற்ற முன்னாள் அதிகாரிகள் பலர் மீண்டும் நகராட்சி நிர்வாக பணிகளில் தலையிட்டு தங்கள் ஆதிக்கத்தை செலுத்தி வருவதாகவும் பரவலான புகார்கள் எழுந்துள்ளன.

எனவே, தேனி மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாகத்துறை உடனடியாக தலையிட்டு, சின்னமன்னூர் நகராட்சிக்கு நிரந்தர ஆணையரை நியமிக்கவும், பல ஆண்டுகளாக ஒரே இடத்தில் பணிபுரியும் பணியாளர்களை அரசு விதிமுறைகளின்படி இடமாற்றம் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# அத்திவாக்கம் கோட்டூர் ஸ்ரீ மாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் விழா

செங்குன்றம், செப்டம்பர் 09:

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரிய ம்பட்டு ஊராட்சி அத்திவாக்கம் கோட்டூர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் விழா ஆலய நிர்வாகிகள் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கணபதி ஹோமத்துடன் கோபூஜை, சுமங்கலி தேவதானுககைபூஜை, தீர்த்த சங்கிரணம், வாஸ்து சாந்தி, பிரவேசபலி, மிருத் சங்கிரணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், பூர்ணாஹூதி உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள், ஹோமங்கள் நடைபெற்றது.

பின்னர் யாகசாலையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனிதநீர் கலசங்களை மேளதாளத்துடன் கொண்டு சென்று ஆலய விமானம், மூலவர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு மஹா கும்பாபிஷேகம் செய்து தீபாராதனை காண்பித்து பக்தர்கள் மீது புனித நீரை தெளித்தனர்.

இதனைத் தொடர்ந்து சுவாமிகளுக்கு வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்து தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இதில் செங்குன்றம், ீர்த்தக்கிரியம்பட்டு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அன்ன தானம் வழங்கினர்.

35 வார்டுகளிலும் விநாயகர் விழா கோலாகலம்:

# இளைஞர்களுக்கு கரம் கொடுத்த கே.ஜி.எஃப் சட்டமன்ற உறுப்பினர் ரூபகலா சசிதர்

கே.ஜி.எஃப்:செப்.9

கே.ஜி.எஃப் நகரில் விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு, 35 வார்டுகளைச் சேர்ந்த இளைஞர்களுக்கு உற்சாகம் அளிக்கும் வகையில் ஒரு முக்கியமான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

விநாயகர் சதுர்த்தி விழாவை சிறப்பாகக் கொண்டாடும் வகையில், 35 வார்டுகளிலும் விநாயகர்சிலை அமைக்க தேவையான நிதியுதவி வழங்கப்படும் என்று கே.ஜி.எஃப் சட்டமன்ற உறுப்பினர் ரூபகலா சசிதர் அவர்கள் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு, கே.ஜி.எஃப் நகரின் இளைஞர்கள் மத்தியில் புதிய உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

விநாயகர் சதுர்த்தி... பக்தியின் திருநாள்... இளைஞர்களின் உற்சாகத் திருநாள்... கே.ஜி.எஃப் நகரின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் திருநாள்! 35 வார்டுகளிலும் விநாயகர் சிலைகள் அமைத்து, அந்தந்த பகுதிகளில் சிறப்பு பூஜைகள் மற்றும் ஆன்மிக நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான ஆர்வம் இளைஞர்களிடையே அதிகரித்துள்ளது.

ஒவ்வொரு வார்டிலும் ஒரு குழு...ஒவ்வொரு குழுவிலும் இளைஞர்களின் பங்களிப்பு... ஒவ்வொரு பகுதியிலும் விநாயகர் பக்தி...



என இந்த ஆண்டு கே.ஜி.எஃப் முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா சிறப்பாக நடைபெறும் எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

இளைஞர்களின் இந்த ஆர்வத்திற்கு ஊக்கமளிக்கும் வகையில், சட்டமன்ற உறுப்பினர் ரூபகலா சசிதர் அவர்களின் நிதியுதவி குறித்த அறிவிப்பு வெளியாகியிருப்பது, விழா ஏற்பாடுகளை மேலும் வேகப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மகிழ்ச்சியான செய்தியை முன்னாள் நகரசபைத் தலைவரும், முன்னாள் முனிசிபல் ஸ்டாண்டிங்கமிட்டி சேர்மனுமான திரு. வள்ளல் வி. முனுசாமி அவர்கள், மோகன் ராஜ் அவர்கள், நந்தா கருணாகரன் உள்ளிட்டோர் தெரிவித்துள்ளனர்.

இது வெறும் விழா கொண்டாட்டத்திற்கான அறிவிப்பாக மட்டுமல்லாமல், இளைஞர்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் ஒரு முயற்சியாகவும் பார்க்கப்படுகிறது.

35 வார்டுகள்... ஆனால் உற்சாகம் ஒன்றே! விநாயகர் சிலைகள் பல... ஆனால் பக்தி ஒன்றே! பகுதிகள் பல... ஆனால் கொண்டாட்டம் ஒன்றே!

விநாயகர் சதுர்த்தி நாளில் கே.ஜி.எஃப் நகரின் பல்வேறு பகுதிகளிலும் பக்தர்கள் ஒன்று கூடி, விநாயகப் பெருமானை வழிபட்டு விழாவை சிறப்பிக்க உள்ளனர்.

இளைஞர்களின் பங்களிப்புடன் நடைபெறும் இந்த விழா, நகர மக்களிடையே மகிழ்ச்சியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் வகையில் அமைய வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

விழா கொண்டாட்டங்கள் அனைத்தும் பொது மக்களின் ஒத்துழைப்புடன், அமைதியாகவும் பாதுகாப்பாகவும் நடைபெற வேண்டும்.

விநாயகர் சதுர்த்தி விழாவின் உண்மையான சிறப்பு என்பது பக்தியிலும், ஒற்றுமையிலும், பிறருக்கு மரியாதை அளிப்பதிலும் இருக்கிறது.

அந்த வகையில், இளைஞர்களின் சக்தி... பொது மக்களின் ஆதரவு... சட்டமன்ற உறுப்பினரின் ஊக்கம்... இவை அனைத்தும் ஒன்றிணைந்தால், கே.ஜி.எஃப் நகரின் 35 வார்டுகளிலும் இந்த ஆண்டு விழா மறக்க முடியாத ஒரு கொண்டாட்டமாக அமையும். கே.ஜி.எஃப் தயாராகிறது...35 வார்டுகள் விழாக்கோலம் பூணத் தயாராகிறது... இளைஞர்கள் உற்சாகத்துடன் களமிறங்கத் தயாராகிறார்கள்... விநாயகப் பெருமானின் அருளை வரவேற்க நகரமே தயாராகிறது!

இந்த ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா கே.ஜி.எஃப் முழுவதும் பக்தி, மகிழ்ச்சி, உற்சாகம் மற்றும் ஒற்றுமையுடன் களை கட்டட்டும்.

விநாயகப் பெருமானின் அருளால், கே.ஜி.எஃப் மக்களின் வாழ்வில் தடைகள் நீங்கி நன்மைகள் பெருகட்டும்...

ஒவ்வொரு குடும்பத்திலும் சந்தோஷம் நிறையட்டும்... ஒவ்வொரு இளைஞரின் வாழ்க்கையிலும் வெற்றி மலரட்டும்... கே.ஜி.எஃப் நகரம் முழுவதும் அமைதியும் வளமும் நிலைக்கட்டும் இளைஞர்களுக்கு உற்சாகம்...35 வார்டுகளுக்கு விழாக்கோலம்...கே.ஜி.எஃப் நகருக்கு பெருமை...விநாயகரின் அருள் அனைவருக்கும்!

கே.ஜி.எஃப் மக்களுக்கு இனிய விநாயகர் சதுர்த்தி நல்வாழ்த்துக்கள்!




# முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி பாஸ்போர்ட்டை ஒப்படைக்க ஸ்ரீவில்லி.நீதிமன்றம் உத்தரவு

அரசு நிறுவனங்களில் வேலை வாங்கித் தருவதாக ரூ.3 கோடி மோசடி செய்த வழக்கில் நீதிமன்ற அனுமதி இன்றி வெளிநாடு செல்லக்கூடாது என்ற நிபந்தனையுடன், முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜியிடம் அவரது பாஸ்போர்ட்டை திரும்ப ஒப்படைக்க ஸ்ரீவில்லிபுத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற உத்தரவிட்டுள்ளது.

ஆவின் உள்ளிட்ட அரசு நிறுவனங்களில் வேலை வாங்கித் தருவதாக ரூ.3 கோடி மோசடி செய்த புகாரில் அதிமுக முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி, அவரது உதவியாளர்கள உட்பட 8 பேர் மீது விருதுநகர் குற்றப்பிரிவு போலீஸார் 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் இரு வழக்குகள் பதிவு செய்தனர்.

இந்த இரு வழக்குகளிலும் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் மீதான ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த இரு வழக்குகளில் இருந்தும் தன்னை விடுவிக்கக்கோரி முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி உள்ளிட்டோர் தாக்கல் செய்த விடுவிப்பு மனுவை தள்ளுபடி செய்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனிடையே, செப்டம்பர் 2ம் தேதி குற்றப்பிரிவு போலீஸார் பதிவு செய்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி தரப்பில் உச்ச நீதிமன்றம் ஜாமீன் நிபந்தனைகளை தளர்த்தியதால் தனது பாஸ்போர்ட்டை திரும்ப வழங்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு தொடர்பான வழக்கில் இன்றைய தினம் ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அதன்படி, நீதிமன்ற அனுமதியின்றி வெளிநாடு செல்லக்கூடாது என்ற நிபந்தனையுடன் முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜியிடம் பாஸ்போர்ட்டை திரும்ப ஒப்படைக்க முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி கந்தகுமார் உத்தரவிட்டார். இதனிடையே, ஆவின் முறைகேடு வழக்கு செப்டம்பர் 17ம் தேதி விசாரணைக்கு வர உள்ளது குறிப்பிடத்தக்கது.

குளத்தில் கழிவுநீர் கலப்பு புகார்:

# நேரில் சென்று ஆய்வு செய்த கலெக்டர் வந்தனா கார்க்; உடனடி தூய்மைப் பணிக்கு உத்தரவு

## குப்பை கொட்டினால் அபராதம் விதிக்க அறிவுறுத்தல்



திருவண்ணாமலை: செப்.9

மேற்கு ஆரணி வட்டாரத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள், மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் செவ்வாய்க்கிழமை (08.09.2026) நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

கண்ணமங்கலம் பேரூராட்சி அய்யம்பாளையம் ஊராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம் 2.0ன் கீழ் ரூ.6.83 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் கழிவுநீர்சுத்திகரிப்பு நிலையப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து மேற்கு ஆரணி வட்டத்திற்குட்பட்ட வண்ணாங்குளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையத்தை ஆய்வு செய்தார். அங்கு குழந்தைகளின் வருகைப் பதிவேடு, எடை மற்றும் உயரம் தொடர்பான விவரங்கள் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும், குழந்தைகளுக்கு சுகாதாரமான முறையில் உணவு வழங்கப்படுகிறதா என்பதையும் நேரில் ஆய்வு செய்தார். மேலும், அங்கன்வாடி மையத்தில் உள்ள குழந்தைகளின் பெற்றோர்களிடம் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் பள்ளியின் சமையல் கூடத்துக்குச் சென்ற மாவட்ட ஆட்சித்தலைவர், உணவு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருட்கள் முறையாகவும் சுகாதாரமானமுறையிலும் பராமரிக்கப்படுகிறதா, உணவுப் பொருட்களின் இருப்பு போதுமான அளவில் உள்ளதா என்பதையும் ஆய்வு செய்தார். சமையல் கூடம் மற்றும் அதன் சுற்றுப்புறத்தை எப்போதும் தூய்மையாகவும் சுகாதாரமான முறையிலும் பராமரிக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

வண்ணாங்குளம் நியாய விலைக் கடையிலும் ஆய்வு மேற்கொண்ட அவர், அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு, பொருட்களின் தரம் மற்றும் பொதுமக்களுக்கு முறையாக விநியோகம் செய்யப்படுகிறதா என்பதைக் கேட்டறிந்தார். பொருட்கள் வழங்கப்பட்ட விவரங்கள் பதிவேடுகளில் முறையாக பதிவு செய்யப்படுகிறதா என்பதையும் சரிபார்த்தார்.

இதனைத் தொடர்ந்து மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அழகுசேனை ஊராட்சியில் விபிஜி ராம்ஜி திட்டத்தின் கீழ் ரூ.8 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும்நீர்த்தேக்கக்குட்டை அமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பணியில் ஈடுபட்டுள்ள பொதுமக்களின் எண்ணிக்கை, மாற்றுத்திறனாளி தொழிலாளர்களின் எண்ணிக்கை மற்றும் வருகைப் பதிவேட்டில் உள்ள விவரங்கள் குறித்து ஆய்வு செய்து, பணிகளை உரிய முறையில் மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மக்கள் புகாருக்கு உடனடி நடவடிக்கை

அழகுசேனை ஊராட்சியில் உள்ள பெருமாள் கோயில் குளத்தில் குப்பைகள் கொட்டப்படுவதுடன், கழிவுநீர் கலந்து வருவதாக அப்பகுதி மக்கள் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் கோரிக்கை வைத்திருந்தனர். இதையடுத்து, அவர்களின் கோரிக்கைக்கு உடனடி நடவடிக்கை எடுக்கும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் நேரடியாக சம்பந்தப்பட்ட இடத்திற்குச்சென்று குளத்தை ஆய்வு செய்தார். குளத்தை உடனடியாக தூய்மைப்படுத்தவும், கழிவுநீர் குளத்தில் கலப்பதைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், குளத்தில் குப்பைகளை கொட்டுவோர் மீது உரிய விதிகளின்படி அபராதம் விதித்து, குளத்தின் தூய்மையை தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மாவட்ட ஆட்சித்தலைவரின் இந்த கள ஆய்வின்போது, செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) சிவநாத், ஆரணி வட்டாட்சியர் முகமது கனி, கண்ணமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலர் முனுசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் எம்.சீனுவாசன், கிரிஜா மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA